www.freetnbooks.com

# முதல் பருவத் தேர்வு-2025

வகுப்பு : 6 | தமிழ் | பதிவு எண் :
காலம் : 2.00 மணி | | மொத்த மதிப்பெண்கள் : 60

**குறிப்புகள் :**

- ❖ மாணாக்கர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப் பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- ❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- ❖ தேர்வெழுத நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4x1=4

1. கூடு கட்டுவதற்கு மரம் கிடைக்காத பறவைகள் .................. வேறிடம் சென்றன.
   அ) பதிலிகளாக ஆ) ஏதிலிகளாக இ) விருந்தாளிகளாக ஈ) பயணிகளாக
2. நாம் .................... சொல்படி நடக்க வேண்டும்.
   அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்
3. ‘ வேதியுரங்கள் ’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............
   அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள் இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு + ரங்கள்
4. காடு + ஆறு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................
   அ) காட்டாறு ஆ) காடாறு இ) காட்டுஆறு ஈ) காடுஆறு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2x1=2

5. இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் ..................
6. பறவைகள் இடம்பெயர்வதற்கு..................... என்று பெயர்.

**III. பொருத்துக.** 4x1=4

7. விளைவுக்கு – பால்
8. அறிவுக்கு – வேல்
9. இளமைக்கு – நீர்
10. புலவர்க்கு – தோள்

**IV. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5x2=10

11. முன்பெல்லாம் மழைக்காலம் எவ்வாறு இருக்கும் ?
12. நாம் எதை நம்பி வாழக்கூடாது ?
13. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது ?
14. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
15. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன ?
16. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
17. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும் ?

**V. கீழ்க்காணும் வினாக்களுள் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x4=12

18. குருவிகள் ஏதிலிகளாக ஆனதற்குக் காரணம் என்ன ?
19. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது ?
20. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.
21. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
22. சார்பெழுத்துகள் எத்தனை ? அவை யாவை ?

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

**VI. அடிபிறழாமல் எழுதுக.** **4+2=6**

23. அ) " தமிழுக்கும் .......................... எனத் தொடங்கி ............. நிருமித்த ஊர் " என முடியும் இன்பத் தமிழ் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) " அருளைப் பெருக்கி .............." எனத் தொடங்கும் கல்வியைப் போற்று பாடலை எழுதுக.

24. "இனிய ..................." எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VII. கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

25. சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) தனிச்சிறப்பு – ..........................................

ஆ) செயற்கை – ..........................................

26. தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.

அ) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.

ஆ) இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

27. கலைச் சொல் தருக.

அ) Touch Screen ஆ) Migration

28. **பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) முத்து தம் ........................ காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)

ஆ) பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் ........... என்று பெயர். (பறவை / பரவை)

29. **கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**

அ) கவிதை – ................................

ஆ) பரிபாடல் – ................................

30. **நம் தலைவர்களின் பிறந்த நாளுக்குரிய விழாவைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கல்வி வளர்ச்சி நாள், மாணவர் நாள், ஆசிரியர் நாள்)

அ) அப்துல்கலாம் – ................................

ஆ) காமராசர் – ................................

31. **சொற்களை இடம் மாற்றிச் சரியான தொடர்களை எழுதுக.**

அ) கற்க போற்றிக் கல்வியைப் வேண்டும்.

ஆ) பயனை கூடாது கற்றதன் மறக்கக்

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2x6=12**

32. அ) தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது ?

**(அல்லது)**

ஆ) 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

33. அ) **கடிதம் எழுதுக.**

விடுப்பு விண்ணப்பம் **(அல்லது)**

ஆ) **கட்டுரை எழுதுக.**

மழை நீர் சேகரிப்பு



www.freetnbooks.com | FREETNBOOKS